

(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 202.]

பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

2026 நவம்பர் 18, புதன்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

165/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீலங்கன் விமானச் சேவை அரசாங்க வங்கிகளிடமிருந்து பெற்றுள்ள கடன்களின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டியுள்ள கடனின் அளவு யாதென்பதையும்;

(iii) முந்தைய அரசாங்கத்தின் காலத்தில் ஸ்ரீலங்கன் விமானச் சேவையை மறுசீரமைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் தொடர்பில் தற்போதைய அரசாங்கத்தின் நிலைப்பாடு யாதென்பதையும்;

(iv) நாட்டின் வரி செலுத்தும் மக்களுக்கு சுமையாக அமையாத வகையில் மேற்படி நிறுவனத்தைப் பராமரித்துச் செல்வதற்காக நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

689/2025

கௌரவ ரோஹண பண்டார,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாநகர சபையின் கீழ் இயங்குகின்ற பிரிவுகள் மற்றும் திணைக்களங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி பிரிவுகள் மற்றும் திணைக்களங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) தற்போது மேற்படி ஒவ்வொரு பிரிவிலும் பணியாற்றுகின்ற நிரந்தர, அமய மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி திணைக்களங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆளணியின் எண்ணிக்கையும் தற்போது நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) ஊழியர் பற்றாக்குறையானது கொழும்பு மாநகர சபையின் செயற்பாடுகளுக்கு இடையூறாக அமைந்துள்ளதால், அந்நிலையைச் சீர்செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

2046/2026

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெரும்பாலான பிரதேசங்களில் பாரம்பரிய மருத்துவ முறைகள் மூலம் வழங்கப்படும் முதியோர் பராமரிப்புச் சேவை நிலையங்கள் போதுமானதாக இன்மையால், முதியோர்கள் தூரப் பிரதேசங்களுக்குச் சென்று சிகிச்சைகளைப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆரம்ப சுகாதாரச் சேவை நிலையங்களை மேம்படுத்தும் வேலைத்திட்டங்களின் கீழ் பாரம்பரிய மருத்துவ சேவைகளுக்காக மருத்துவர்களை நியமித்து சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) தொற்றா நோய்களுக்குச் சுதேச மற்றும் மேற்கத்தேய மருத்துவச் சிகிச்சைகளை ஒருங்கிணைத்து சிகிச்சைகளை வழங்குவதற்கான தேசியக் கொள்கை அல்லது வேலைத்திட்டம் ஏதேனும் நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதையும்;

(iv) தொற்றா நோய்கள், மூளை முடக்குவாதம், டவுன் சிண்ட்ரோம், பார்கின்சன் நோய், நீரிழிவு நோய் மற்றும் புற்றுநோய் போன்ற கடுமையான நோய்களுக்குச் சில பாரம்பரிய மருத்துவமனைகளில் வழங்கப்படும் சிகிச்சைச் சேவைகளை 25 மாவட்டங்களிலும் பரவலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சுதேச மருத்துவச் சேவையில் உள்ளிருப்புப் பயிற்சியைப் பூர்த்தி செய்தவுடன், மருத்துவர்களுக்கு 'வதிவிட மருத்துவ உத்தியோகத்தர்களாக' சேவையாற்றுவதற்கு வாய்ப்பு வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) வேலையற்றிருக்கும் சுதேச மருத்துவர்களுக்கு எதிர்காலத்தில் வேலைவாய்ப்புகளை வழங்குவதற்காக அமைச்சிடம் திட்டங்கள் ஏதேனும் உள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

2107/2026

கௌரவ (திருமதி) எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) உடவளவை தேசிய பூங்காவிற்கும் லுணுகம்வெஹெர தேசிய பூங்காவிற்கும் இடையில் உள்ள யானை வழித்தடம், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதி யாது;

(ii) மேற்படி வழித்தடத்தின் இருமருங்கிலும் பாதுகாப்பு மின்சார வேலி அமைக்கப்பட்ட திகதி யாது;

(iii) மேற்படி மின்சார வேலியை அமைப்பதன் முக்கிய நோக்கம் யாது;

(iv) யானை பாதுகாப்பு வேலியை அமைப்பதற்குச் செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகை எவ்வளவு;

(v) 2018 ஆம் ஆண்டில் யானை பாதுகாப்பு வேலி இருக்கும் போதே அதிகாலை வேளையில் கிராமத்துக்குள் புகுந்த ஒரு யானை பாடசாலை மாணவரொருவரைக் கொன்றுள்ளதை அறிவாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) யானை வழித்தடத்தின் இருமருங்கிலும் அமைக்கப்பட்டுள்ள மின்சார வேலியில் பலஹருவ கிராமம் உள்ளடங்கும் பகுதியில் பிரதான மின்சார வேலி தற்போது செயலிழந்துள்ளதென்பதை அறிவாரா?

(ii) மேற்படி மின்சார வேலியை அகற்றுவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அந்த முடிவு எடுக்கப்பட்ட திகதி மற்றும் அதன் நோக்கம் யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

2545/2026

கௌரவ நிஷாந்த பெரேரா,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மாதிரிக் கிராமங்களின் கீழ் காலி மாவட்டத்தில் வீடுகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கிராமங்கள், ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி வீட்டு பயனாளிகளைத் தெரிவுசெய்வதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட அளவுகோல்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75(5) இன் ஏற்பாடுகளின் பிரகாரம், 2026 நவம்பர் 21 ஆம் திகதி சனிக்கிழமை, 23ஆம் திகதி திங்கட்கிழமை, 25 ஆம் திகதி புதன்கிழமை, 26 ஆம் திகதி வியாழக்கிழமை, 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 28 ஆம் திகதி சனிக்கிழமை, 30 ஆம் திகதி திங்கட்கிழமை மற்றும் 2026 டிசம்பர் 01 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 02 ஆம் திகதி புதன்கிழமை, 03 ஆம் திகதி வியாழக்கிழமை, 04 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 05 ஆம் திகதி சனிக்கிழமை, 07 ஆம் திகதி திங்கட்கிழமை, 08 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 09 ஆம் திகதி புதன்கிழமை, 10 ஆம் திகதி வியாழக்கிழமை, 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 12 ஆம் திகதி சனிக்கிழமை மற்றும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை ஆகிய நாட்கள் "ஒதுக்கீட்டுச்" சட்டமூலம் (2027) இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களாக இருக்குமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 1),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75(2) இன் ஏற்பாடுகளின் பிரகாரம், "ஒதுக்கீட்டுச்" சட்டமூலம் (2027) இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களான 2026 நவம்பர் 21 ஆம் திகதி சனிக்கிழமை, 23 ஆம் திகதி திங்கட்கிழமை, 25 ஆம் திகதி புதன்கிழமை, 26 ஆம் திகதி வியாழக்கிழமை, 28 ஆம் திகதி சனிக்கிழமை, 30 ஆம் திகதி திங்கட்கிழமை மற்றும் 2026 டிசம்பர் 01 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 02 ஆம் திகதி புதன்கிழமை, 03 ஆம் திகதி வியாழக்கிழமை, 05 ஆம் திகதி சனிக்கிழமை, 07 ஆம் திகதி திங்கட்கிழமை, 08 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 09 ஆம் திகதி புதன்கிழமை, 10 ஆம் திகதி வியாழக்கிழமை மற்றும் 12 ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய நாட்களில் சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 6.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் 8(5) ஆம் மற்றும் (6) ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் தொழிற்படுமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 2),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75(2) இன் ஏற்பாடுகளின் பிரகாரம், "ஒதுக்கீட்டுச்" சட்டமூலம் (2027) இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களான 2026 நவம்பர் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 2026 டிசம்பர் 04 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மற்றும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய நாட்களில் சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 6.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 6.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் 8(5) ஆம் மற்றும் (6) ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் தொழிற்படுமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 3),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75(2) இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், "ஒதுக்கீட்டுச்" சட்டமூலம் (2027) இன் பரிசீலனைக்காக ஒதுக்கப்பட்ட தினமாகிய 2026 டிசம்பர் 14 ஆம் திகதி திங்கட்கிழமை சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.00 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 6.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — (ஒதுக்கப்பட்ட ஐந்தாம் நாள்) — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2026 நவம்பர் 12) [1].

*2.

விசர்நாய்க்கடி நோயை ஒழித்தல் மற்றும் நாய்களைப் பதிவுசெய்தல் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2026 ஒக்டோபர் 23) [1].

*3.

இலங்கைக் கிரிக்கெட் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களைத் தடுத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

வெளிநாட்டுப் பயங்கரவாதிப் போராளிகளைத் தடுத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

குடிவரவுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

இலங்கை ஊடக உயர்தொழிலர்களின் பட்டயம்பெற்ற நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— மீயுயர் நீதிமன்றங்களின் கட்டிடத் தொகுதி முகாமை சபையின் வருடாந்த அறிக்கை (2022),— 1987 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, மீயுயர் நீதிமன்றங்களின் கட்டிடத் தொகுதி முகாமை சபையின் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் கீழ் 2023.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய மீயுயர் நீதிமன்றங்களின் கட்டிடத் தொகுதி முகாமை சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.11.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2026.02.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*11.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2022),— 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபையின் சட்டத்தின் 93(2) ஆம் பிரிவின் கீழ் 2024.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.11.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2026.02.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*12.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2023),— 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபையின் சட்டத்தின் 93(2) ஆம் பிரிவின் கீழ் 2025.08.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.11.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2026.02.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*13.
நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— இலங்கை சட்டஉதவி ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை (2022),— தேசிய அரச பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, சட்ட உதவிச் சட்டத்தின் 24(2) ஆம் பிரிவின் கீழ் 2024.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சட்டஉதவி ஆணைக்குழுவின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.11.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2026.02.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*14.
நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— இலங்கை சட்டஉதவி ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை (2023),— தேசிய அரச பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, சட்ட உதவிச் சட்டத்தின் 24(2) ஆம் பிரிவின் கீழ் 2025.08.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சட்டஉதவி ஆணைக்குழுவின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.11.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2026.02.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*15.
நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை (2020),— 1991 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் 2023.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.04.26 மற்றும் 2025.11.18 ஆம் திகதிகளில் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2026.02.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*16.
நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை (2021),— 1991 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் 2024.01.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.04.26 மற்றும் 2025.11.18 ஆம் திகதிகளில் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2026.02.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*17.
நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை (2022),— 1991 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் 2024.06.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.11.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2026.02.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*18.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை (2023),— 1991 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் 2025.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.11.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2026.02.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*19.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை (2022),— 2007 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் 2024.07.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.11.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2026.02.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*20.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை (2023),— 2007 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் 2025.10.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.11.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2026.02.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*21.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கான, பாராளுமன்றத்தின் தீர்மானத்தால் நிர்ணயிக்கப்படும் ஊதியம் வழங்கப்படுவதுடன் அத்தகைய ஊதியம் 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 6(6) இன் கீழ் இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நிதியத்திற்குப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன்;

பொறியியல், சட்டம் அல்லது வணிக முகாமைத்துவத் துறையில் தகுதியும் அனுபவமும் பெற்ற ஐந்து ஆணைக்குழு உறுப்பினர்களை, அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடன் அமைச்சரால் நியமிப்பது தொடர்பான சட்டத்தின் பிரிவு 6(6) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளைப் பரிசீலித்து, ஆணைக்குழு உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புகளின் அளவை அங்கீகரித்து, இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு ஊதியம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளைப் பின்வருமாறு வழங்குவதற்கு, 2026.09.14 ஆந் திகதிய 26/1892/804/220 ஆம் இலக்க அமைச்சரவையின் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாலும்:—

ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள்	தவிசாளர்	உறுப்பினர்கள்
மாதாந்த கொடுப்பனவு	ரூபா. 200,000.00	ரூபா.100,000.00
மாதாந்த போக்குவரத்துக் கொடுப்பனவு/ வாகனம்	வாகனம்	அலுவலக பணிகளில் பங்கேற்பதற்காக ஏற்படும் போக்குவரத்து மற்றும் இதர அமையச் செலவுகள்.
மாதாந்த எரிபொருள் வரையறை / லீட்டர்	150 லீட்டர்	-
மாதாந்த தொடர்பாடல் கொடுப்பனவுகள்	தொலைபேசி கட்டணத்தை மீளளிப்புச் செய்தல்	தொலைபேசி கட்டணத்தை மீளளிப்புச் செய்தல்

அதன் பிரகாரம், இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவானது, ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கு, 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 6(6) ஆம் பிரிவின்படி, இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நிதியிலிருந்து மேலே குறிப்பிடப்பட்ட ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும் என பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

*22.

இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

வாடகை (நீக்கல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 செப்தெம்பர் 24) [1].

*25.

தொலைத்தொடர்பு அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

நிதி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10),— "2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

28.

மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

கோதாகொட குணரதன நாஹிமி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

யூஎன்வீ மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

2501/2026

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 'வளமான நாடு – அழகான வாழ்க்கை' கொள்கைப் பிரகடனத்தின் 68ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'நாட்டின் சகல பிரிவுகளிலுமுள்ள ஊழியர்களுக்கும் பொருந்தும் வகையிலான ஓய்வூதியக் கொடுப்பனவு பற்றிய விரிவான கொள்கையொன்றினைத் தயாரித்து நடைமுறைப்படுத்துதல்' என்ற முன்மொழிவானது 2026.09.01ஆம் திகதியின் போது நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் நிதி / பௌதீக முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?
